சுருக்கம்

பொதுப் பணிகள் – ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் – எட்டு ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களை இணைத்து நான்காக மாற்றி – ஆணைகள் வெளியிடப்பட்டன – திருத்தங்கள்-வெளியிடப்படுகின்றன.

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (என்) துறை

அரசாணை(நிலை) எண். 100

நாள்: 28.5.2008
வைகாசி 15,
திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்க:

1. அரசாணை (நிலை) எண். 65, பமநிசீ (என்) துறை, நாள் 3.4.2008.

மேலும் படிக்க:

2. வேலூர் ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையரது கடித எண். 295 / 2008 / A நாள் 15.4.2008,
3. திருநெல்வேலி ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையரது கடித எண். A 133 / 08, நாள் 15.4.2008.
4. நாகர்கோவில் ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையரது கடித எண். A 132 / 2008 நாள் 17.4.2008.

oooo

ஆணை:

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், எட்டு ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்களை நான்காக ஒருங்கிணைத்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. தற்போது வேலூர், கோயம்புத்தூர் மற்றும் சேலம் (பொறுப்பு), திருநெல்வேலி, நாகர்கோவில் (பொறுப்பு) ஆகிய ஒழுங்கு நடவடிக்கை ஆணையர்கள் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களை 1.4.2008 முதல் ஒருங்கிணைத்து வெளியிடப்பட்ட ஆணையின் நகல்கள் 15.4.2008 அன்று தான் அவர்கள் அலுவலகங்களில் கிடைத்ததாக தெரிவித்துள்ளனர். அவ்வாணையில் 31.3.2008 உடன் தீர்ப்பாயங்களில் பணியாற்றும் பணியாளர்களின் பணியிடங்களை கலைத்து (Disband) அரசு ஆணையிட்டுள்ளதாகவும், பணியாளர்கள் ஏப்ரல் 2008ல் 14 நாட்கள் பணியாற்றிவிட்டதாகவும், வேலூர், கோயம்புத்தூர், நாகர்கோயில் மற்றும் திருநெல்வேலி ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்களை முடித்துவைக்கும் (winding up), பணிக்கு சிறிது கால அவகாசம் ஆகும் என்றும் தெரிவித்துள்ளனர். மேலும், தீர்ப்பாயங்களில் கையாளப்படும் வழக்குகள் குறித்த கோப்புகள் மற்றும் ஆவணங்களை ஒருங்கிணைக்கப்பட்ட தீர்ப்பாயங்களுக்கு வழங்க ஏதுவாக வரிசைப்படுத்தி தொகுத்து வைக்க வேண்டும் என்றும்,

(த.பியா)

அவ்வலுவலகங்களில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் கணினி மற்றும் தளவாடச் சாமான்களை சென்னை, சேலம் மற்றும் மதுரை அலுவலகங்களுக்கு போக்குவரத்து வாகனங்கள் மூலம் அனுப்ப ஆவன செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளனர். மேலும் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் அனைத்தும் தனியாருக்குச் சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வருவதால் கட்டிடங்களின் சொந்தக்காரர்களுக்கு அலுவலகம் மாற்றப்படுவதை தெரிவித்து வழங்க வேண்டிய வாடகைத் தொகையை கணக்கிட்டு வழங்க ஆவன செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

3. மேலே கூறப்பட்ட காரணங்களால் எட்டு ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்களை நான்காக 1.4.2008 முதல் ஒருங்கிணைத்து வெளியிடப்பட்ட ஆணைகளை 31.5.2008 வரை நீட்டித்து, 1.6.2008 முதல் ஒருங்கிணைப்பினை செயல்படுத்த வேண்டும் என வேலூர், கோயம்புத்தூர் மற்றும் சேலம் (பொறுப்பு), திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் (பொறுப்பு) ஒழுங்கு நடவடிக்கை ஆணையர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர். மேலும், ஒருங்கிணைப்பு ஆணையை 1.6.08 முதல் செயல்படுத்துவதால், மாவட்ட வருவாய் அலகிலிருந்து எடுக்கப்பட்டு தற்போது தீர்ப்பாயங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களை அந்தந்த மாவட்ட வருவாய் நிருவாகங்கள் திரும்ப எடுத்துக் கொள்ள ஏதுவாக இருக்கும் என்றும் ஒழுங்கு நடவடிக்கை ஆணையர்கள் தெரிவித்துள்ளனர்.

4. மேலும், கோயம்புத்தூர் ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் (பொறுப்பு) அவர்கள், தனது கடிதத்தில், அவ்வலுவலகம் 1984 முதல் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருவதாகவும், அங்கு 60க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும் (175 குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்கள் – 2401 சாட்சிகள்) மேற்கண்ட வழங்குகளில் தொடர்புடையவர்கள் என்று தெரிவித்துள்ளார். ஒரு ஆண்டுக்கு சராசரியாக 36 வழக்குகள் கோயம்புத்தூர் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயத்தில் பெறப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். அங்கு பணியாற்றும் பணியாளர்களில் ஐந்து பேர் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயத்தைச் சார்ந்த பணியாளர்கள் என்றும் ஆறு பேர் மாவட்ட வருவாய்ப் பணியைச் சார்ந்தவர்கள் என்றும் தெரிவித்துள்ளார். மாறாக, சேலம் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயத்தில் 26 வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும், அங்கு பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் சேலம் மாவட்ட வருவாய் அலகிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலே கூறப்பட்டுள்ள காரணங்களை கருத்தில் கொண்டு சேலம் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயத்தை கோயம்புத்தூர் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயத்துடன் ஒருங்கிணைத்தால் அந்த ஒருங்கிணைப்பு நிருவாக ரீதியாக வசதியான மாற்றமாக அமையும் எனவும் தெரிவித்துள்ளார்.

5. மேலே கூறப்பட்டுள்ள காரணங்களை கருத்தில் கொண்டு வேலூர், கோயம்புத்தூர் மற்றும் சேலம் (பொறுப்பு), திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் (பொறுப்பு) ஒழுங்கு நடவடிக்கை ஆணையர்களின் வேண்டுகோளை ஏற்க அரசு முடிவு செய்தது. அவ்வாறே, அரசாணை (நிலை) எண். 65, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (என்) துறை, நாள் 3.4.2008ல் வெளியிடப்பட்ட ஆணைகளுக்கு கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் செய்து அரசு ஆணையிடுகிறது:

<u>திருத்தங்கள்</u>

அரசாணை (நிலை) எண். 65, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (என்) துறை, நாள் 3.4.2008ல் பத்தி 4ற்கு பதிலாக கீழ்க்கண்டவாறு மாற்றீடு செய்யப்படுகிறது:

(அ) வேலூர் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயம் சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு சென்னை ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்துடன் 1.6.2008 முதல் ஒருங்கிணைக்கப்படுகிறது.

(த.பி.பா)

(ஆ) சேலம் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயம் கோயம்புத்தூரை தலைமையகமாகக் கொண்டு கோயம்புத்தூர் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்துடன் 1.6.2008 முதல் ஒருங்கிணைக்கப்படுகிறது.

(இ) நாகர்கோயில் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் மதுரையைத் தலைமையகமாகக் கொண்டு மதுரை ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்துடன் 1.6.2008 முதல் ஒருங்கிணைக்கப்படுகிறது.

(ஈ) திருச்சி ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயமானது தற்போது இயங்கி வருவது போன்றே தற்போதுள்ள மாவட்டங்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது.

(உ) சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களுக்குரிய மாவட்டங்கள் இணைப்பில் உள்ளவாறு மாற்றியமைக்கப்படுகிறது.

(ஊ) வேலூர், சேலம், நாகர்கோயில் மற்றும் திருநெல்வேலி ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட தற்காலிகப் பணியிடங்களை 31.5.2008 பிற்பகல் வரை நீட்டிக்க அனுமதிக்கப்படுகிறது.

(எ) வேலூர், சேலம், நாகர்கோயில் மற்றும் திருநெல்வேலி ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர்கள் அலுவலகக் கட்டிடங்களை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைத்தல், பாதக் கணக்குகளின் ஒத்திசைவு போன்ற எல்லாவிதமான நடைமுறைகளையும் 31.5.2008ற்கு முன்னர் பூர்த்தி செய்யுமாறும், அவரவர்களது அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களை அவர்கள் எந்தெந்த மாவட்ட வருவாய் அலகிலிருந்து எடுக்கப்பட்டனரோ அந்தந்த மாவட்ட வருவாய் அலகிற்கே 31.5.2008 பிற்பகல் அல்லது அதற்கு முன்னதாகவோ திருப்பி அனுப்புமாறும் வேலூர், சேலம், நாகர்கோயில் மற்றும் திருநெல்வேலி ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

குத்சியா காந்தி,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

ஒழுங்கு நடவடிக்கைகள் ஆணையர்கள், சென்னை, வேலூர், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில்
ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள், சென்னை, வேலூர், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில்.
அனைத்து துறைச் செயலாளர்கள்.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள்.
அனைத்து துறைத் தலைமையகங்கள், (மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் நீதிபதிகள் உள்பட).
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9 / மதுரை.
மாவட்ட கருவூல அலுவலர், வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில்.
மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைகள்) (தணிக்கை), சென்னை-18/35.
பொது (சிறப்பு.அ) துறை, சென்னை-9.
விழிப்புப் பணி ஆணையம், சென்னை-9.

(த.பி.பா)

(தொடர்ச்சி)

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
விழிப்புப் பணி ஆணையர், சென்னை–9.
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (பயிற்சி) துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
நிதித் (பொது/வரவு செலவு II / சிஎம்பிசி) துறை, சென்னை–9.
அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (நிசீ. II) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

(த.பி.பா)

## இணைப்பு

**ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள், அவற்றின் தலைமையகங்கள் மற்றும் அவற்றிற்குரிய மாவட்டங்கள்.**

| வரிசை எண் | ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்தின் பெயர் | தலைமையகங்கள் | மாவட்டங்களின் பெயர்கள் | |
|---|---|---|---|---|
| 1. | ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம், சென்னை. | சென்னை | 1 | சென்னை |
| | | | 2 | திருவள்ளூர் |
| | | | 3 | காஞ்சிபுரம் |
| | | | 4 | வேலூர் |
| | | | 5 | திருவண்ணாமலை |
| | | | 6 | விழுப்புரம் |
| 2. | ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 1 | கோயம்புத்தூர் |
| | | | 2 | நீலகிரி |
| | | | 3 | ஈரோடு |
| | | | 4 | சேலம் |
| | | | 5 | நாமக்கல் |
| | | | 6 | தர்மபுரி |
| | | | 7 | கிருஷ்ணகிரி |
| 3. | ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம், மதுரை | மதுரை | 1 | மதுரை |
| | | | 2 | திண்டுக்கல் |
| | | | 3 | தேனி |
| | | | 4 | திருநெல்வேலி |
| | | | 5 | விருதுநகர் |
| | | | 6 | கன்னியாகுமரி |
| | | | 7 | தூத்துக்குடி |
| | | | 8 | இராமநாதபுரம் |
| | | | 9 | சிவகங்கை |
| 4. | ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி | 1 | திருச்சிராப்பள்ளி |
| | | | 2 | கரூர் |
| | | | 3 | புதுக்கோட்டை |
| | | | 4 | தஞ்சாவூர் |
| | | | 5 | பெரம்பலூர் |
| | | | 6 | நாகப்பட்டிணம் |
| | | | 7 | திருவாரூர் |
| | | | 8 | கடலூர் |